03.07.2025

OS. No.170/2013

**DW1 – ஆண்டி**

**<u>1–ஆம் வாதி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

1–ஆம் பிரதிவாதி அறக்கட்டளை 18.10.2004–ஆம் ஆண்டு ஏற்பட்டது என்றால் சரிதான். அதற்கான ஆவணம் வா.சா.ஆ.1 ஆகும். அந்த அறக்கட்டளையில் ஆறு நபர்கள்தான் உறுப்பினர்கள் என்றால் சரிதான். அவர்கள் உறவினர்கள், குடும்பத்தினர்கள் என்றால் சரிதான். பொது சேவைக்காக ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளை என்றால் சரிதான். இது பொது அறக்கட்டளை என்றால் சரிதான். வாதிகள் I.A.No.05/2019 என்ற மனுவில் 18 வகையான ஆவணங்கள் மற்றும் தகவல்களை கேட்டு அது அனுமதிக்கப்பட்டது என்றாலும், அவ்வாறு அனுமதிக்கப்பட்ட பின்பும் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால், என்னிடம் இருக்கக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்ய முடியும். 2013–ஆம் ஆண்டு சிவக்குமார் என்பவரை Trustee–ஆக சேர்த்தோம் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு முன்பே அவர் அறங்காவலர் ஆகிவிட்டார் என்றால் சரிதான். பிரபு என்பவரை எப்போது அறங்காவலர் பதவியிலிருந்து நீக்கினோம் என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஆண்டு அறிக்கை அறக்கட்டளை நிர்வாகிகளுடைய கூட்டத்தை நடத்திதான் வெளியிடுவோம் என்றால் சரிதான். உத்தேச பட்ஜெட் தயார் செய்யப்பட்ட பொதுக்குழுவில் நிறைவேற்றப்படும் என்றால் சரிதான். உத்தேச பட்ஜெட் போடவில்லை. வா.சா.ஆ.2 வருமான வரி விலக்கிற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் ஞாபகமில்லை. 100 கோடி ரூபாய் வரை வரிவிலக்கு பெற்றுள்ளோம் என்றால் சரிதான். அறக்கட்டளைக்கு மத்திய, மாநில அரசின் நிதியுதவி பெறுவோம் என்றால், அவ்வாறு பெறுவதில்லை. கல்வி நிறுவனங்கள் நடத்துவதற்கு அறக்கட்டளையின் பெயரில் அரசிடமிருந்து பணம் ../

பெற்றுள்ளேனா என்றால் இல்லை. அறக்கட்டளை விதிகளை திருத்துவதற்கு வருமான வரி துறையிடமிருந்து முன் அனுமதி வாங்கியுள்ளோமா என்றால் வாங்கவில்லை, அதுசம்பந்தமாக ஆடிட்டருக்குதான் தெரியும். ஆடிட்டரின் தணிக்கை அறிக்கைக்கு நிர்வாக குழுவின் ஒப்புதல் வாங்கியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.1, 2–இன்படி நான் அறக்கட்டளையின் நிர்வாகத்தை நடத்திவரவில்லை என்றால் சரியல்ல. பஞ்சாயத்து செயலாளர் சாட்சியாக விசாரிக்கப்பட்டு, அவர் சில ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், அந்த ஆவணங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. இமயம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, MCA மற்றும் பாலிடெக்னிக் காலேஜ் ஆகியவற்றிற்கு அங்கீகாரம் வாங்கியுள்ளதாக சொல்கிறேன் என்றால் சரிதான். கட்டிட பயன்பாட்டுச் சான்றிதழ் மற்றும் தரச்சான்றிதழ் வாங்கியுள்ளேன். அவை சர்வே நம்பர்.198 Part–இல் வருகிறது என்றால் எனக்கு ஞாபகமில்லை. உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை வழக்கு தாக்கல் செய்து அதில் வழக்கறிஞர் ஆணையர் எங்கள் கல்லூரியை வந்து பார்த்தார்கள் என்றால் சரிதான். அந்த சர்வே எண்ணில் கட்டிடம் இல்லை என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். MCA படிப்பிற்கு நான் அங்கீகாரம் பெறவில்லை என்றால் வாங்கியுள்ளேன். நான் கட்டிடம் கட்டியதாக பொய்யாக தகவல் கொடுத்தேன் என்றால் சரியல்ல, கட்டிடம் கட்டி இடித்துவிட்டோம். அது எத்தனை சதுர அடி என்று எனக்கு ஞாபகமில்லை. கட்டிட அனுமதிச் சான்றிதழ், தரச்சான்றிதழ் ஆகியவற்றை எந்த தேதியில் வாங்கினேன் என்றால் ஞாபகமில்லை. கட்டிட அனுமதி பெறுவதற்கான ஆவணங்களை சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் தாக்கல் செய்துள்ளோம் என்றால், அதுபற்றி எங்கள் ட்ரஸ்ட் உறுப்பினர் பிரபுவிற்குதான் தெரியும். அறக்கட்டளையினுடைய நிர்வாகம் தலைவர் மற்றும் செயலாளருக்குதான் பொறுப்பு என்றால் சரிதான். கட்டிட .../

அனுமதிக்கான வரைபட அனுமதி வட்டாட்சியர் மூலமாக பஞ்சாயத்திற்கு வரும் என்றால், அதுபற்றி பிரபுவிற்குதான் தெரியும். கட்டிட அனுமதிக்கு வட்டாட்சியர் அனுப்பியதாக சொல்வது பொய்யானது என்றால் சரியல்ல. அதுசம்பந்தமாக பஞ்சாயத்தில் தீர்மானம் போடப்பட்டு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது. அந்த தீர்மானத்தில் அறக்கட்டளை நிர்வாகிகள் மீது நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றால் தெரியாது, உத்தரவு எனக்கு வரவில்லை.

**(குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி 1–ஆம் வாதி தரப்பில் ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/- M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.